# உலக அமைதியை நிலைநாட்டுவதில் வீட்டோ அதிகார நாடுகளின் வகிபங்கு

**றெஜிகா, அ., கணேசலிங்கம், கே. ரீ.**
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
regikka199616@gmail.com

*உலக நாடுகளின் மத்தியிலே ஒற்றுமையை நிலவச் செய்வதிலும் உறுதியான நட்பினை வளர்த்துக் கொள்வதையும் நோக்காகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபைக்கு பிரதான இடமுண்டு. உலக அமைதியை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்துவதற்காகவும் இன்னொரு உலகளாவிய போர் ஏற்பட்டுவிடாமல் தடுப்பதனையும் நோக்காக கொண்டு தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை ஓர் அங்கமாக காணப்படுகின்றது. இதில் பாதுகாப்பு சபையானது உலகளாவிய அமைதியினை உருவாக்கும் நோக்கில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை காலத்துக்கு காலம் மேற்கொண்டு வருகின்றது. இச்சபையிலுள்ள நிரந்தர உறுப்பினர்கள் தம்வசம் வைத்துள்ள வீட்டோ அதிகாரத்தின் மூலம் உலக அமைதியானது நிலைநாட்ட முயல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. எனவே வீட்டோ அதிகாரத்தின் மூலம் எவ்வாறு ஏனைய உலக நாடுகளில் முரண்பாடுகள் இடம் பெறுவதுடன் அந்நாடுகள் எவ்வாறு தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்கின்றன எனவும் வீட்டோ நாடுகள் மூலம் எவ்வாறு உலக அமைதியை நிலைநாட்ட முடியாதுள்ளது என்பதனை காலத்தின் தேவையெனக் கருதி ஆராய்கின்றது. உலக நாடுகளிற்குள்ளும் நாடுகளிற்கிடையேயும் பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு பிரதான காரணம் பாதுகாப்புச் சபையில் உள்ள வீட்டோ அதிகாரமே ஆகும். வீட்டோ நாடுகள் தமக்கென வழங்கப்பட்ட இந்தச் சிறப்பு அதிகாரத்தை ஏகமனதாக பயன்படுத்தும் பட்சத்தில் நாடுகளின் மத்தியில் இடம்பெறுகின்ற பிரச்சனைகளை எளிதாக தீர்த்து விட முடியும். ஆயினும் வீட்டோ நாடுகள் தமக்குள் இரு அணியாக பிளவு பட்டு செயல்படுவதன் காரணமாகவே இன்று வரை உலகளாவிய அமைதியை ஏற்படுத்த முடியவில்லை என்பதும் பிரதான காரணமாக உள்ளது. அத்துடன் உலக நாடுகள் இடையே நிலவி வருகின்ற பல்வேறுபட்டு முரண்பாடுகளை தடுப்பதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் பயங்கரவாதமும் வன்முறையும் உலக மக்களை அச்சுறுத்தத் தான் செய்கின்றது என்றே கூற முடியும்.*

**திறவுச் சொற்கள் :** பாதுகாப்புச்சபை, உலக அமைதி, பொருளாதாரத்தடை, அதிகாரம், உலக சமாதானம்.